**சென்னை–6, அரசுத் தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள்**
**முன்னிலை : திருமதி க.சசிகலா**

**ந.க.எண்.011113/பி1/2026** **நாள் : 22.09.2026**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6 – 2026 – 2027 –ஆம் கல்வியாண்டிற்கான பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு – பள்ளி மாணவர்கள் பெயர்ப் பட்டியல் தயாரித்தல் – முன்னிலைப் பணியாக EMIS வலைதளத்தில் மாணவர்களின் விவரங்களை சரிபார்த்து திருத்தங்கள் ஏதேனும் இருப்பின் அத்திருத்தங்கள் மேற்கொள்ள அறிவுரைகள் வழங்குதல் – தொடர்பாக.

**பார்வை :** 1.G.O. Ms. No. 1906 Education Department Daed: 22.8.77

2.அரசாணை (நிலை) எண்.62 பள்ளிக் கல்வி (அ.தே)த் துறை நாள்: 25.03.2022

----

**<u>ஆணை</u> :**

2026–2027–ஆம் கல்வியாண்டிற்கான பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வுக்கான பள்ளி மாணவர்களின் பெயர்ப்பட்டியல் தயாரிப்பதற்கு, EMIS வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள மாணவர்களின் கீழ்க்காணும் விவரங்கள் பயன்படுத்தப்பட உள்ளன.

1. மாணாக்கரின் பெயர் (தமிழ் மற்றும் ஆங்கிலம்)
2. பிறந்த தேதி
3. புகைப்படம் (jpeg, jpg)
4. பாலினம்
5. இன வகைப்பாடு
6. மதம்
7. மாணாக்கரின் பெற்றோர் / பாதுகாவலர் பெயர் (தமிழ் மற்றும் ஆங்கிலம்)
8. மாற்றுத் திறனாளி வகை மற்றும் சலுகைகள்
9. கைபேசி எண்
10. பயிற்று மொழி (Medium of instruction)
11. மாணாக்கரின் வீட்டு முகவரி
12. பெற்றோரின் ஆண்டு வருமானம்

அனைத்து உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களும், **23.09.2026 முதல் 07.10.2026 வரையிலான நாட்களில் EMIS–** வலைத்தளத்தில் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள User ID மற்றும் Password–ஐ பயன்படுத்தி தங்களது பள்ளியில் பத்தாம் வகுப்பு மாணவர்களது மேற்குறிப்பிட்ட விவரங்கள் சரியாக உள்ளதா என்பதனையும், மாணவரின் பெயர், பிறந்ததேதி, புகைப்படம் மற்றும் பெற்றோர்/பாதுகாவலர் பெயர் (தமிழ்/ஆங்கிலம்) ஆகிய விவரங்களை பின்வரும் அறிவுரைகளைப் பின்பற்றி சரிபார்த்து, திருத்தங்கள் இருப்பின் உடன் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும்.

மேற்காண் விவரங்களை சரியான முறையில் பதிவேற்றம் செய்திட, இவ்வலுவலகத்தால் வழங்கப்படும் வெற்று Declaration Form–ஐ www.dge.tn.gov.in என்ற வலைதளத்தில் பதிவிறக்கம் செய்து பொதுத் தேர்வு எழுத உள்ள அனைத்து மாணவர்களிடமும் வழங்கி, பூர்த்தி செய்து தேர்வரது பெற்றோர்/பாதுகாவலர் கையொப்பம் பெற்று தங்கள்வசம் வைத்துக்கொள்ள வேண்டும். மேலும், மாணவரின் பெயர் மற்றும் பிறந்த தேதிக்கு பிறப்புச் சான்றிதழ் நகலையும், பெற்றோர் மற்றும் பாதுகாவலர் பெயர் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் இடம்பெற்றிருக்கும் வகையில் பள்ளி ஆவணங்கள்/ஆதார் அட்டை நகலினையும் இணைத்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

மாணவர்கள் வழங்கிய மேற்காண் விவரங்களின் அடிப்படையிலும், பின்வரும் அறிவுரைகளைப் பின்பற்றியும் EMIS –வலைத்தளத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

<u>பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு</u>

1. <u>மாணவரின் பெயர் (ஆங்கிலம் மற்றும் தமிழ்)</u>

**மாணவரது பெயர் பிறப்புச் சான்றிதழில் உள்ளவாறே இருத்தல் வேண்டும்.** பெயருக்கும் தலைப்பெழுத்துக்கும் இடையில் (Between name and initial) ஒரு இலக்க இடைவெளி மட்டுமே இருத்தல் வேண்டும் (புள்ளி வைத்தல் கூடாது). இரு தலைப்பெழுத்துக்கள் இருப்பின் இரு தலைப்பெழுத்துக்களுக்குமிடையே ஒரு இலக்க இடைவெளி மட்டுமே இருத்தல் வேண்டும்.

பிறப்புச் சான்றிதழின் அடிப்படையில் பெயரில் சில எழுத்துக்கள் திருத்தம் கோரும்பட்சத்தில்,பெயரில் சில எழுத்துக்களை மட்டும் மாற்றம் செய்து கொள்ளலாம்.

**மாணவரது பெயரை தமிழில் பதிவேற்றம் செய்யும் போது தலைப்பெழுத்தும் தமிழில் இருக்க வேண்டும். உதாரணமாக, மாணவரது தந்தையின் பெயர் கண்ணன் எனில், தலைப்பெழுத்து க என இருக்க வேண்டும். EMIS வலைத்தளத்தில் உள்ள மாணவரது பெயர் / பெற்றோரது பெயர் உள்ளிட்ட தமிழில் உள்ள விவரங்கள் அனைத்தும் UNICODE Font – ல் மட்டுமே இருத்தல் வேண்டும். வேறு ஏதேனும் தமிழ் Font – ல் விவரங்கள் இருந்தால் அதனை முழுமையாக நீக்கம் (Delete) செய்து விட்டு UNICODE Font– ல் மீண்டும் பதிவேற்றம் செய்தல் வேண்டும்.**

**அரசிதழில் பெயர் மாற்றம் செய்தவர்களுக்கு மட்டுமே, அரசிதழின் நகலைப் பெற்று அதன் அடிப்படையில் பெயர் மாற்றம் செய்து கொள்ள, பள்ளித் தலைமை ஆசிரியரால் பள்ளி அளவிலான தொடர்புடைய ஆவணங்களில் உரிய திருத்தங்களை மேற்கொண்டப் பின்னரே, திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும்.**

2. பிறந்த தேதி

பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வினைப் பொறுத்தவரை, மாணவரின் பிறந்த தேதியினை பிறப்புச் சான்றிதழுடன் ஒப்பிட்டு சரிபார்த்த பின்னரே திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டும். மாணவர்கள் தேர்வு நடைபெறும் மாதத்தின் முதல் நாளன்று கண்டிப்பாக 14 வயது நிறைவு செய்தவர்களாக இருத்தல் வேண்டும். **அவ்வாறு 14 வயதினை நிறைவு செய்யாதவர்களாக இருப்பின், பார்வை 1–ல் காணும் அரசாணையின்படி, சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலர்/ முதன்மைக் கல்வி அலுவலரிடம் கண்டிப்பாக வயது தளர்விற்கான (Age relaxation) ஒப்புதல் சார்ந்த ஆணை பெற்றிருக்கவேண்டும்.** மதிப்பெண் சான்றிதழ் வழங்கப்பட்ட பின்னர், பிறந்த தேதி மாற்றம் கோருவோரின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட மாட்டாது.

3. **புகைப்படம்**

சமீபத்தில் எடுக்கப்பட்ட மாணவரது மார்பளவு புகைப்படத்தை (Passport size photo) மட்டுமே பதிவேற்றம் செய்யவேண்டும். பதிவேற்றம் செய்யப்படும் புகைப்படம் 100×128 Pixel (50 Kb –க்குள்) jpeg, jpg வடிவில் இருக்க வேண்டும்.

4. **மாணவரது பெற்றோர் / பாதுகாவலர் பெயர் (ஆங்கிலம் மற்றும் தமிழ்)**

மாணவர்களது பெற்றோர் (தாய் மற்றும் தந்தை) / பாதுகாவலரது பெயர்களை, அவர்களது **பள்ளி ஆவணங்கள் /ஆதார் அட்டையில் உள்ளவாறு தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் தவறில்லாமல் பதிவேற்றம் செய்தல் வேண்டும்.**

மாணவர்களது பெற்றோர் (தாய் மற்றும் தந்தை) / பாதுகாவலரது பெயர்களில் ஏதேனும் திருத்தம் இருப்பின் அவர்களது பள்ளி ஆவணங்கள்/ ஆதார் அட்டையில் உள்ளவாறு சில எழுத்துக்களை மட்டும் திருத்தம் செய்து கொள்ளலாம்.

**5. கைபேசி எண்**

தேர்வு முடிவுகள் மாணாக்கரின் பெற்றோரது / பாதுகாவலரது கைபேசி எண்ணுக்கே குறுஞ்செய்தியாக அனுப்பப்படும் என்பதால், பதிவேற்றம் செய்யப்படும் கைபேசி எண் சரியானதாக இருப்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

**பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வெழுதும் அனைத்து தேர்வர்களும் பகுதி – I –ல் தமிழ் மொழியை மட்டுமே மொழிப்பாடமாக தேர்வெழுத அனுமதிக்கப்படுவர்.**

பள்ளித் தலைமையாசிரியர்கள், தங்கள் பள்ளியில் பயிலும் பத்தாம் வகுப்பு மாணவர்களின் அனைத்து விவரங்களையும் EMIS வலைத்தளத்தில் சென்று சரிபார்த்து, திருத்தங்கள் இருப்பின் திருத்தம் செய்யும் பணியினையும் மேற்குறிப்பிட்டுள்ள நாட்களிலேயே மேற்கொள்ளுதல் வேண்டும்.

பெயர்ப்பட்டியலின் அடிப்படையிலேயே மதிப்பெண் சான்றிதழ் அச்சிடப்படுகிறது. மேலும் தேர்வரின் பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழின் அடிப்படையில் தான் உயர்கல்வி மற்றும் வேலை வாய்ப்புகள் வழங்கப்படுகிறது. எனவே, தேர்வரின் பெயர், பிறந்த தேதி உள்ளிட்ட அனைத்து விவரங்களையும் பெற்றோர் கையொப்பமிட்ட Declaration Form உடன் ஒப்பிட்டு சரியாக இருத்தலை உறுதி செய்து பெயர்ப்படியலினை தயார் செய்திட வேண்டும்.

பதிவேற்றம் செய்யப்பட்ட மாணாக்கரின் விவரங்களில் தவறுகள் எதுவும் ஏற்படின் சம்பந்தப்பட்ட வகுப்பாசிரியர் மற்றும் பள்ளித் தலைமையாசிரியரே முழுப் பொறுப்பேற்க நேரிடும். எனவே இப்பணியினை தலைமையாசிரியர் தமது நேரடி கவனத்தில் மிகுந்த பொறுப்புடனும், சிரத்தையுடனும் மேற்கொள்ள வேண்டும்.

எக்காரணத்தைக் கொண்டும் மதிப்பெண் சான்றிதழ் வழங்கிய பின்னர் திருத்தங்கள் கோரி தேர்வுத்துறைக்கு அனுப்புவதை தவிர்த்தல் வேண்டும்.

மேலும், மேற்குறிப்பிட்டவாறு பதிவேற்றம் செய்த மாணவர்களின் விவரங்களின் அடிப்படையில் இடைநிலை பொதுத் தேர்வுக்கான பெயர்ப்பட்டியல் தயாரித்தல் (EMIS –ல் இருந்து Pull செய்து Apply) மற்றும் தேர்வுக் கட்டணம் செலுத்துதல் போன்ற பணிகளை அரசுத் தேர்வுகள் இயக்கக இணையதளத்தில் மேற்கொள்வதற்கான தேதிகள் குறித்த விவரம் பின்னர் தெரிவிக்கப்படும்.

இடைநிலைப் பொதுத் தேர்வு எழுதும் மாற்றுத்திறனாளி மாணவர்களின் Unique Disability Identity Card நகல் அல்லது மருத்துவக்குழுவால் வழங்கப்படும் மருத்துவச் சான்றிதழையும் பெற்று Declaration Form – உடன் இணைத்து வழங்க அறிவுறுத்த வேண்டும். மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கு மேற்காண் சான்றிதழினை பதிவேற்றம் செய்ய வேண்டும். அவ்வாறு பதிவேற்றம் செய்யப்பட்ட மாற்றுத்திறனாளித் தேர்வர்களுக்கு மட்டுமே அவர்களுக்கு தகுதியான சலுகைகள் வழங்கப்படும். பின்னர் சலுகை கோரி பெறப்படும் விண்ணப்பங்கள் அனுப்புவது தவிர்த்தல் வேண்டும்.

மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில் அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் மாணவர்களின் விவரங்களை நன்கு சரிபார்த்திட தேவையான நடவடிக்கைகள் மேற்கொண்டிட தெரிவிக்கப்படுகின்றது.

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள், மாவட்ட கல்வி அலுவலர்கள் (இடைநிலை/ தனியார் பள்ளிகள்), பள்ளிகளில் மாணவர்களின் விவரங்கள் சரிபார்க்கும் பணிகள் நடைபெறுவதை உறுதி செய்திட தெரிவிக்கப்படுகிறது.

**இணைப்பு:**

1. பார்வையில் காணும் அரசாணைகள்.
2. Declaration Form.

**ஒம்/–**
**இயக்குநர்**

**பெறுநர்**

1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்,
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்.(இடைநிலை/தனியார் பள்ளிகள்)
3. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்
4. அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித்தலைமையாசிரியர்கள், (முதன்மைக் கல்வி அலுவலர் வழியாக)

**நகல்:**

1. மாநில திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டம்.
   – தகவலுக்காகப் பணிந்தனுப்பப்படுகிறது.
2. உறுப்பினர் செயலர், மாதிரிப் பள்ளிகள்.
   – தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
3. இயக்குநர், பள்ளிக்கல்வி இயக்ககம், சென்னை–6.
   - தகவலுக்காக அனுப்பப்படுகிறது.
4. இயக்குநர், தனியார் பள்ளிகள் இயக்ககம், சென்னை–6.
   - தகவலுக்காக அனுப்பப்படுகிறது.